# மாகாணக் கல்வித் திணைக்களம்

**வட மாகாணம்**

**மாகாணமட்ட இரண்டாந் தவணைப்பரீட்சை – 2016**

***வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்***

**தரம் - 10** **நேரம் :- 3 மணி**

**சுட்டெண் :.........................................** **புள்ளி :-**

---

## பகுதி - I

**மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து புள்ளடித்தாளில் இடுக.**

1. பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்தல் அல்லது விநியோகம் செய்தல் தொடர்பான பொருளாதார நடவடிக்கைகள் எவ்வாறு அழைக்கப்படும்?
   1. வியாபாரம் 2. வணிகம் 3. உற்பத்தி 4. சந்தைப்படுத்தல்

2. மனித தேவைகளை நிறைவேற்றும் பல்வேறு முறைகள்.
   1. விருப்பம் 2. கேள்வி 3. உற்பத்தி 4. திருப்தி

3. பின்வருவனவற்றுள் தேவையாக கருதமுடியாதது?
   1. உணவு 2. காற்று 3. போக்குவரத்து 4. காப்புறுதி

4. வணிகத்தின் பிரதான நோக்கமாக கருதப்படுவது
   1. இலாபத்தை உச்சப்படுத்தல் 2. கிரயத்தை கட்டுப்படுத்தல்
   3. சந்தையில் நிலைத்திருத்தல் 4. விற்பனை அதிகரித்தல்

5. பின்வருவனவற்றுள் சேவை உற்பத்தி வணிகம் எது?
   1. பாண் உற்பத்தி 2. ஆடை உற்பத்தி
   3. சிகையலங்கரிப்பு நிலையம் 4. மட்பாண்ட உற்பத்தி

6. *ஏனைய உற்பத்திக் காரணிகளை ஒழுங்கமைக்கும் உற்பத்திக் காரணி*
   1. முயற்சி 2. நிலம் 3. உழைப்பு 4. மூலதனம்

7. வணிகக் கருமங்களை நிறைவேற்றும் நபர்கள்
   1. வழங்குனர்கள் 2. வாடிக்கையாளர்கள் 3. அரசாங்கம் 4. ஊழியர்கள்

8. வணிகத்தில் செல்வாக்குச் செலுத்தக் கூடியதும் வணிகத்தால் கட்டுப்படுத்தக் கூடியதுமான சூழல்
   1. வணிகச் சூழல் 2. அகச் சூழல்
   3. புறச் சூழல் 4. பொருளாதாரச் சூழல்

9. தனிநபர்களுடைய நம்பிக்கை விழுமியங்களை உள்ளடக்கிய சூழல்
   1. அரசியல் சூழல் 2. பொருளாதாரச் சூழல்
   3. சமூக கலாசாரச் சூழல் 4. தொழிநுட்ப சூழல்

10. பூகோளமயமாதலுக்கு அடிப்படையாக அமைந்த சூழல்
    1. தொழிநுட்ப சூழல் 2. பொருளாதாரச் சூழல்
    3. அரசியல் சூழல் 4. சமூக கலாசார சூழல்

11. வணிகத்தின் மீது வாடிக்கையாளர் கொண்டுள்ள அதிக திருப்தி
    1. பலம் 2. பலவீனம்
    3. வாய்ப்பு 4. அச்சுறுத்தல்

kalvi.lk

12. ஐரோப்பிய ஒன்றிய கட்டமைப்புள்ள நாடுகளால் பயன்படுத்தும் நாணய அலகு
1. டொலர் 2. யூரோ 3. ஜென் 4. ரூபா

13. நோக்கத்தின் அடிப்படையில் வணிகத்தை வகைப்படுத்தலானது
1. சிறிய நடுத்தர அளவு வணிகம், பேரளவு வணிகம்
2. தனியார் துறை, அரச துறை
3. அரசதுறை இலாப நோக்கற்ற வணிகம்
4. இலாப நோக்குள்ள இலாப நோக்கற்ற வணிகம்

14. பங்குடமை வணிக அமைப்பை பதிவு செய்யும் சட்டம் எது?
1. பங்குடமைச் சட்டம் 2. கம்பனிச் சட்டம்
3. வணிக பெயர் கட்டளைச் சட்டம் 4. மோசடி தவிர்ப்புச் சட்டம்

15. பங்குடமையின் பங்காளர்களின் உச்ச எல்லையை வரையறுக்கும் சட்டம்
1. கம்பனிச் சட்டம் 2. பங்குடமைச் சட்டம்
3. மோசடி தவிர்ப்புச் சட்டம் 4. வணிகப் பெயர் கட்டளைச் சட்டம்

16. வரையறுத்த பொதுக் கம்பனியொன்றின் ஆகக் குறைந்த பங்குதாரர் எண்ணிக்கை யாது?
1. 2 2. 1 3. 7 4. 50

17. சட்ட ஆளுமையுடைய வணிக அமைப்பு
1. தனி வியாபாரம் 2. பங்குடமை
3. திணைக்களம் 4. கம்பனி

18. பதிவுக்கட்டணம் இன்றி கட்டாயம் பதிவு செய்ய வேண்டிய வணிக அமைப்பு
1. கம்பனி 2. கூட்டுறவு
2. தனி வியாபாரம் 4. பங்குடமை

19. பங்கு வழங்குவதன் மூலமாக பணத்தை திரட்டமுடியாத கம்பனி
1. பொதுக்கம்பனி 2. சொந்த கம்பனி
3. கரைகடத்த கம்பனி 4. பட்டியலிடப்பட்ட கம்பனி

20. அதிகாரசபை, ஆணைக்குழு, சபைகள் , பணியகம் போன்ற பெயர்களில் அழைக்கப்படும் வணிக அமைப்பு
1. அரச கம்பனி 2. கூட்டுறவு
3. அரச கூட்டுத்தாபனம் 4. அரச திணைக்களம்

21. பின்வருவனவற்றுள் இலாப நோக்கற்ற வணிக அமைப்பு எது?
1. தனியுரிமை வியாபாரம் 2. பங்குடமை
3. கம்பனி 4. கூட்டுறவு

22. அங்கத்தவர்களினால் மூலதனம் ஈடுபடுத்தப்பட்டு உருவாக்கப்படும் அமைப்பு
1. கூட்டுறவு 2. கம்பனி
3. கூட்டுத்தாபனம் 4. திணைக்களம்

23. தனியுரிமை வணிகத்தின் சிறப்பு பண்பாக அமையக் கூடியது
1. இலாபங்களை பகிர்ந்து கொள்ளல் 2. நட்டப் பொறுப்பு வரையறையற்றது.
3. தொழில் இரகசியங்கள் பேண முடியும் 4. சட்ட ஆளுமையுடையது

Education கல்வி

24. பங்குடமையின் சிறப்புப் பண்பாக அமையாதது

1. அதிக மூலதனம் திரட்டுதல்
2. இடர்களை பரவலாக்குதல்
3. இரகசியங்களை பாதுகாக்க முடியும்
4. நட்டப் பொறுப்பு வரையறையற்றது.

25. கூட்டுறவு வணிகத்தை பதிவு செய்யும் இடம்

1. கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்
2. பிரதேச செயலகம்
3. கம்பனி பதிவாளர் திணைக்களம்
4. பிரதேச சபை

26. பின்வருவனவற்றுள் கணக்கீடு தொடர்பான சரியான கூற்று

1. தகவல்களை திரட்டுதல்
2. தகவல்களை பதிவு செய்தல்
3. உடைமையாளருக்கு தகவல்களை வழங்குதல்
4. அக்கறையுடைய தரப்பினருக்கு தகவல்களை வழங்குதல்.

27. ஒரு நிறுவனத்தின் நிதி நிலைமையை வெளிப்படுத்திக் காட்டும் கூற்று

1. நிதி நிலைமைக் கூற்று
2. வருமானக் கூற்று
3. காசேடு
4. பரீட்சை மீதி

28. கணக்கீட்டின் கூறுகளாக அமையாதது

1. சொத்துக்கள்
2. பொறுப்புக்கள்
3. உரிமையாண்மை
4. இலாபங்கள்

29. நடைமுறைச் சொத்துக்களை கொண்ட தொகுதி

1. சரக்கிருப்பு, கடன்பட்டோர், இயந்திரங்கள்
2. சரக்கிருப்பு, கடன்பட்டோர், பெறவேண்டிய வருமானம்
3. கடன் கொடுத்தோர், கடன்பட்டோர், சரக்கிருப்பு
4. வங்கி மேலதிகப்பற்று, கடன்பட்டோர், சரக்கிருப்பு

30. வரவு மீதியைக் கொண்ட தொகுதி?

1. சொத்து, செலவீனம், நட்டம்
2. சொத்து, வருமானம். நட்டம்
3. சொத்து, வருமானம், நட்டம்
4. சொத்து, பொறுப்பு, செலவு

31. கணக்கீட்டுச் சமன்பாடு தொடர்பான சரியான கூற்று

1. மூலதனம் = சொத்து + பொறுப்பு
2. பொறுப்பு = சொத்து + மூலதனம்
3. சொத்து = மூலதனம் - பொறுப்பு
4. சொத்து = மூலதனம் + பொறுப்பு

32. பின்வரும் விடயங்களில் உரிமையை குறைப்பதில் தாக்கத்தை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கலாக இருப்பது

1. செலவீனம், பற்று
2. வருமானம், பற்று
3. வருமானம், செலவு
4. மேலதிக மூலதனம், வருமானம்

33. வங்கிக்கடன் பெறவதற்கான இரட்டைப் பதிவு யாது?

1. காசுக்கணக்கு வரவு, வங்கி கணக்கு செலவு
2. வங்கிகடன் கணக்கு வரவு, காசுக்கணக்கு செலவு
3. காசுக்கணக்கு வரவு, வங்கிக் கடன் கணக்கு செலவு
4. வங்கிக்கடன் கணக்கு வரவு, வங்கிக் கணக்கு செலவு

34. மூலதனக் கணக்கு, பற்றுக் கணக்கு உள்ளடங்கும் கணக்கு வகை எது?

1. சொத்துக் கணக்கு
2. உரிமைக் கணக்கு
3. பொறுப்புக் கணக்கு
4. வருமானக் கணக்கு

35. மூல ஏடாகவும் பேரேடாகவும் தொழிற்படும் முதன்மையேடு

1. காசேடு 2. விற்பனை நாளேடு 3. கொள்வனவு நாளேடு 4. பொதுக் குறிப்பேடு

36. காசேட்டில் கொடுப்பனவுக்கான மூல ஆவணம் யாது?

1. கச்சாத்து
2. கொள்வனவு பட்டியல்
3. விற்பனைப் பட்டியல்
4. பற்றுச் சீட்டு

37. கொடுத்த கழிவுக்கான இரட்டைப் பதிவு யாது?

1. கடன் கொடுத்தோன் கணக்கு வரவு, கடன்பட்டோர்க்கான கணக்கு செலவு
2. கொடுத்த கழிவு கணக்கு வரவு, காசுக்கணக்கு செலவு
3. கொடுத்த கழிவு கணக்கு வரவு, கடன் பட்டோர் கணக்கு செலவு
4. காசுக்கணக்கு வரவு, கொடுத்த கழிவு கணக்கு செலவு

38. பின்வரும் தகவல்களை உபயோகித்து x நிறுவனத்தின் 01 யூலை 2016இல் மீள் நிரப்பல் செய்ய வேண்டிய வசக்கட்டு தொகை யாது?

30.யூன்.2016 இல் முடிவடைந்த மாதத்தில் செலவிடப்பட்ட சில்லறைச் செலவு ரூபா 2950
மாதாந்தம் வசக்கட்டுத் தொகை ரூபா 3000 இருத்தல் வேண்டும்.

1. ரூ 3000 2. ரூ 50 3. ரூ 2950 4. ரூ 5950

39. காசோலை மூலமான கொடுப்பனவுகளுக்கான மூல ஆவணம்

1. கொடுப்பனவுக் கச்சாத்து
2. பற்றுச்சீட்டு
3. அடியிதழ்
4. காசோலை

40. தற்போதைய உள்நாட்டு முத்திரைக் கட்டணம் யாது?

1. 1 ரூபா
2. 5 ரூபா
3. 15 ரூபா
4. 10 ரூபா

Education கல்வி அධ්‍යාපන

# மாகாணக் கல்வித் திணைக்களம்

**வட மாகாணம்**

**மாகாணமட்ட இரண்டாந் தவணைப்பரீட்சை – 2016**

***வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்***

**தரம் - 10** **நேரம் :- 3 மணி**

**சுட்டெண் :..........................................** **புள்ளி :-**

---

## பகுதிII

**முதலாம் வினா உட்பட பகுதி அ இல் இருந்து இரண்டு வினாக்களுக்கும் பகுதி ஆ இருந்து இரண்டு வினாக்களுக்கும் ஆக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

(01). திரு குமார் என்பவர் ஆடை தைப்பதில் அனுபவம் வாய்ந்த ஒருவராவர். இவர் அதிஸ்ர இலாபச் சீட்டில் தனக்கு கிடைத்த ரூ500000ஐ மூலதனமாகக் கொண்டு குமாரி புடவையகம் எனும் வியாபார நிறுவனத்தை 1.1.2016ல் ஆரம்பித்தார். இவர் இத்தினத்தில் ரூ100000 மக்கள் வங்கியில் வைப்புச் செய்து ஒரு நடைமுறைக் கணக்கையும் ஆரம்பித்தார். அத்துடன் ரூ150000 பெறுமதியான இயந்திரங்களையும் கொள்வனவு செய்தார். 1.4.2016 அன்று தனது நண்பனான ராஜா என்பவரிடம் ரூ300000/= பெற்று தனது வணிகத்தில் இணைத்துக் கொண்டு KR புடவையகம் என பெயரை மாற்றம் செய்தார்.

மேற்கூறப்பட்ட நிகழ்வுக் கற்கை அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

I. குமாரி புடவையகம் எவ்வகை வணிகம் ஆகும்.

II. இவ் வணிகம் கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டுமா? அவ்வாறாயின் எந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும்?

III. இந்த வணிகத்தின் நன்மைகள் எவை?

IV. RK நிறுவனம் எந்தவகை வணிகம் ஆகும்?

V. அதன் நன்மைகள் எவை?

VI. 1.1.2016 நிகழ்ந்த கொடுக்கல் வாங்கல்களை எழுதுக.

VII. அவற்றிற்கான மூலப்பதிவு ஆவணங்கள் எவை?

VIII. அவற்றிற்கான இரட்டைப் பதிவுகளைத் தருக?

IX. 1.4.2016 நிகழ்ந்த கொடுக்கல் வாங்கல்களுக்குரிய இரட்டைப்பதிவு யாது?

X. 1.4.2016ல் கைவசம் உள்ள காசு எவ்வளவு?

(2×10=20புள்ளிகள்

**பகுதி – அ**

(02). 1. வணிகத்தின் பிரதான, துணை நோக்கங்கள் இவ்விரண்டு தருக?

2. பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி தேவை, விருப்பங்களை வேறுபடுத்துக?
உணவு, இட்லி, கல்வி, பாடசாலை, சுகாதாரம், வைத்தியசாலை, உடை, சீருடை, உறையுள், மாடிவீடு.

| தேவைகள் | விருப்பங்கள் |
|---|---|
| | |

3. பொருள் உற்பத்தி வணிகம், சேவை உற்பத்தி வணிகம் ஆகியவற்றுக்கு இவ்விரண்டு உதாரணம் தருக?

4. உற்பத்திக் காரணிகள் எவை? அவை ஒவ்வொன்றுக்கும் வழங்கப்படும் சன்மானங்கள் எவை? (2×4 = 8 புள்ளிகள்)

kalvi.lk

**(03).** 1. வணிகச் சூழல் காரணிகளை பாய்ச்சல் கோட்டு வரைபடம் மூலம் காட்டுக?

2. புறச் சூழல் காரணிகள் 04 தருக?

3. வணிகம் தொடர்பாக அரசினால் அமுல்படுத்தப்படும் சட்டங்கள் எவை?

4. பின்வரும் நாட்டு நாணய அலகினை குறிப்பிடுக?

இந்தியா, ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா, இங்கிலாந்து

(2×4 =8புள்ளிகள்)

**(04).** 1. நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு வணிக அமைப்பை வகைப்படுத்துக?

2. கூட்டிணைக்கப்பட்ட கம்பனியின் பொதுவான பண்புகள் 04 குறிப்பிடுக?

3. அரச திணைக்களத்தின் அனுகூலங்கள், பிரதி கூலங்கள் 02 குறிப்பிடுக?

4. முகாமைத்துவத்தின் நான்கு தொழிற்பாடுகள் எவை?

(2×4 =8புள்ளிகள்)

**பகுதி – ஆ**

**(05).** 1. (அ) கணக்கீட்டின் முக்கியத்துவம் இரண்டினைக் குறிப்பிடுக? (01 புள்ளி)

(ஆ) சொத்தொன்றில் காணக்கூடிய பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக? (01 புள்ளி)

2. சாயி வணிகத்தில் 2016 யூலை மாதத்தில் முதல் வாரத்தில் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல் பின்வருமாறு.

i. 2016.07.01 மூலதனமாக இட்ட காசு ரூபா 500,000
ii. 2016.07.04 உடன்காசுக் கொள்வனவு ரூபா 250,000
iii. 2016.07.06 வங்கியிலிருந்து பெற்ற கடன் ரூபா 300,000
iv. 2016.07.07 உரிமையாளர் தனிப்பட்ட தேவைக்காக எடுத்த காசு ரூபா 10000
v. 2016.07.09 செலுத்திய மின்சாரம் ரூபா 5000

மேற்குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீட்டுச் சமன்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற முறையினைக் காட்டுக. அதற்காக பின்வரும் மாதிரியினை பயன்படுத்தவும். (1) வது கொடுக்கல் வாங்கல் பதிவு செய்கின்ற முறை இங்கு உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது.

| கொடுக்கல் வாங்கல் இல | சொத்து | உரிமை | பொறுப்பு |
|---|---|---|---|
| 1. | + 500,000 | +500,000 | |
| 2. | | | |
| 3. | | | |

(2×4 =8புள்ளிகள்)

(ஆ) மேலே 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களுக்கான இரட்டைப்பதிவினைக் குறிப்பிடுக.

| கொடுக்கல் வாங்கல் இல | வரவுக் கணக்கு | செலவுக் கணக்கு |
|---|---|---|
| 1. | காசுக்கணக்கு | மூலதனக் கணக்கு |
| 2. | | |

**(06).** 1. (அ) சில்லறைக் காசேடு என்றால் என்ன?

(ஆ) சில்லறைக் காசேட்டுக்குரிய மூல ஆவணம் யாது? (2×1 =2புள்ளிகள்)

2. விக்டர் வணிகத்தின் 2016 யூலை மாதத்தின் முதல் இருவாரத்தில் இடம் பெற்ற சில்லறைச் செலவுகள் பின்வருமாறு.

| திகதி | விபரம் | கைச்சாத்து இல | தொகை |
|---|---|---|---|
| 01.07.2016 | வசக்கட்டு கிடைத்தது | | 2500 |
| 02.07.2016 | தபாற் கட்டணம் | 01 | 100 |
| 03.07.2016 | போக்குவரத்து செலவு | 02 | 80 |
| 04.07.2016 | உபசரனைச் செலவு | 03 | 120 |
| 05.07.2016 | முத்திரைச் செலவு | 04 | 70 |
| 06.07.2016 | போக்குவரத்துச் செலவு | 05 | 70 |
| 07.07.2016 | ரூபனுக்கு கொடுத்தது | 06 | 250 |
| 08.07.2016 | வண்டிக்கூலி | 07 | 100 |
| 09.07.2016 | உட்சுமை கூலி | 08 | 100 |
| 10.07.2016 | உபசரிப்பு செலவு | 09 | 125 |
| 11.07.2016 | எழுதுகருவிச் செலவு | 10 | 100 |
| 13.07.2016 | சுத்தீகரிப்பு செலவு | 11 | 150 |
| 15.07.2016 | செலவுகள் மீள் நிரப்பப்பட்டது | | |

**வேண்டப்படுவது:-**

அஞ்சற் செலவு, பிரயாணச் செலவு, உபசரணைச் செலவு, நானாவித செலவு, பேரேட்டுக் கணக்கு எனும் பகுப்பாய்வு நிரல்களை பயன்படுத்தி 2016 யூலை மாதத்தின் முதல் இரு வாரங்களுக்கான சில்லறைக் காசேட்டினை தயாரிக்குக.

(10புள்ளிகள்)

**(07).** 1. (அ) பேரேட்டுக் கணக்குகளின் வகை எத்தனை? அவை யாவை?

(3புள்ளிகள்)

(ஆ) பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுக்குரிய மூல ஏட்டினையும், மூல ஆவணத்தையும் குறிப்பிடுக.

1) காசுப் பெறுவனவு
2) மீள் விற்பனைப் பொருள்கள் கடனுக்கு கொள்வனவு (2புள்ளிகள்)

2. 01.06.2016 இல் ராஜன் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு 30.06.2016 இல் முடிவடைந்த மாதத்தின் கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.

01.06.2016 இல் மூலதனம் ரூபா 100,000 இட்டு வணிகம் ஆரம்பிக்கப்பட்டது.
03.06.2016 இல் 40000 ரூபாவிற்கு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டது.
05.06.2016 காசுக்கு விற்பனை ரூபா 20000.
10.06.2016 இல் ஊழியர் சம்பளமாக ரூபா 8000 செலுத்தப்பட்டது.
16.06.2016 இல் ரூபா 12000 இற்கு தளபாடங்கள் நிறுவனப் பாவனைக்காக கொள்வனவு செய்யப்பட்டது.
27.06.2016 இல் பெற்ற தரகுப் பணம் ரூபா 14000

மேற் காட்டிய கொடுக்கல் வாங்கல்களை ராஜன் நிறுவனத்தின் காசுக்கணக்கு, பேரேட்டுக் கணக்குகளில் பதிந்து காட்டுக.

(7புள்ளிகள்)

kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

Follow and Get papers Daily ..!

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினுாடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page